# தமிழ் நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044- 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை- 600 032.
முன்னிலை : முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)
*******

முறையீட்டு மனு எண். **939/2016**

ஆணை எண். **153/2016**

நாள் : **30/09/2016**

**திரு. அருண்,**
**பிளாட் எண்.363, எப்–2 அன்னை அஹானா,**
**ஆலவட்டம் அம்மன் கோயில் தெரு,**
**அஷ்டலஷ்மி நகர்,**
**கூடலூர் – 603209.**

**– முறையீட்டு மனுதாரர்**

**பேரூராட்சிகளின் இயக்குநர்,**
**குறளகம்,**
**சென்னை – 600 108.**

**– எதிர் மனுதாரர்**

கூடலூர், ஆலவட்டம் அம்மன் கோயில் தெருவில் வசிக்கும் திரு. சி. அருண் என்பவரது 05.09.2016 நாளிட்ட முறையீட்டு மனு 08.09.2016 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு முறையீடு எண். 939/2016 ஆக பதிவு செய்யப்பட்டது.

## ஆணை

மனுதாரர் தனது முறையீட்டு மனுவில் 28.05.2016 நாளிட்ட கடிதத்தில் தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005–ன் கீழ் பேரூராட்சி பொறியியல் பிரிவு பணியமர்வு குறித்து 14 வகையான விவரங்களை அளிக்க பொது தகவல் அலுவலர் / உதவி இயக்குநர், பேரூராட்சிகளின் இயக்ககம் அவர்களிடம் கோரியதாகவும் ஆனால், விவரங்கள் / தகவல்கள் ஏதும் வழங்கப்படாததால் மனுதாரர் அவருடைய 04.07.2016 நாளிட்ட கடிதத்தில் மேல்முறையீடு செய்யப்பட்டது என்றும், மேல்முறையீட்டிற்கும் பதில் ஏதும் பெறப்படாததால், 06.08.2016 நாளிட்ட கடிதத்தில் மாநில தலைமை தகவல் ஆணையத்திற்கு முறையீடு செய்யப்பட்ட நிலையில், மேல்முறையீட்டு அலுவலர், பேரூராட்சிகளின் இயக்ககம், சென்னை அவர்களின் 16.08.2016 நாளிட்ட ந.க.எண்.7053/2016,அ6 –ல் கோரப்பட்ட தகவல்களுக்கு பதிலாக பொது தகவல் அலுவலர் / உதவி இயக்குநர், பேரூராட்சிகளின் இயக்ககம், சென்னை அவர்களின் 30.06.2016 நாளிட்ட ந,க.எண்.7053/2016,அ6 ன் நகல் அனுப்பி வைக்கப்பட்டதாகவும் பொது தகவல் அலுவலர் / உதவி இயக்குநர், பேரூராட்சிகளின் இயக்ககம், சென்னை அவர்களால் வழங்கப்பட்ட பெரும்பாலான தகவல்கள் திருப்தி அளிக்கவில்லை என்றும் தெரிவித்து நேரடி விசாரணை மேற்கொண்டு, பேரூராட்சி பொறியியல் பிரிவில் உள்ள குறைகளை களைந்து அவரால் கோரப்பட்டுள்ள தகவலுக்கு நடவடிக்கை மேற்கொண்டு திருப்திகரமான பதில் வழங்குமாறு கேட்டுக்கொண்டுள்ளார். மனுதாரரின் மேற்படி மனுவினை பரிசீலித்ததில், அம்மனு தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் பெறப்பட்ட தகவல் குறித்த மேல்முறையீடாக உள்ளது. எனவே, இது குறித்து மேல்முறையீடு இம்முறைமன்ற அதிகார வரம்பில்

அமையாது. மேலும் மனுதாரர் தனது முறையீட்டு மனுவில் எதிர் மனுதாரராக பேரூராட்சிகளின் இயக்குநரை குறிப்பிட்டுள்ளார். 2014–ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டத்தின் படி, இம்முறைமன்ற நடுவமானது உள்ளாட்சி அமைப்புகளின் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் மற்றும் அதன் கீழ் பணி செய்யும் அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் குறித்த குறைபாடுகளை விசாரிக்கும் அமைப்பேயாகும் எனவே, அரசு அதிகாரியான பேரூராட்சிகளின் இயக்குநர் இம்முறைமன்ற நடுவத்தின் வரம்பிற்குள் உட்படுத்தப்படவில்லை. மேற்சொன்ன காரணங்களால் இம்முறையீட்டு மனு தள்ளுபடி செய்து ஆணையிடப்படுகிறது.

**2016** ஆம் ஆண்டு **செப்டம்பர்** திங்கள் **30** ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வழைப்பாணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்

பெறுநர்:
திரு. அருண்,
பிளாட் எண்.363, அன்னை அஹானா,
ஆலவட்டம் அம்மன் கோயில் தெரு,
அஷ்டலஷ்மி நகர்,
கூடலூர் – 603209.